# தனிநபர் கல்வித் திட்டம் (IEP): மாணவரின் வெற்றிக்கான ஒரு திட்டம்

## IEP என்றால் என்ன?

தனிப்பட்ட கல்வித் திட்டம் (IEP) என்பது ஒரு மாணவருக்குபள்ளி வாரியம் வழங்கும் சிறப்புக் கல்வி ஆதரவுகள் மற்றும் சேவைகளை விவரிக்கும் ஒரு எழுதப்பட்டதிட்டமாகும். இது தொடர்ந்துமதிப்பாய்வு செய்யப்பட்டுப் புதுப்பிக்கப்படும் ஒரு வேலைத்திட்டமாகும்.

## அது ஏன் முக்கியம்?

IEP என்பது உங்கள் குழந்தையின்கற்றல் தேவைகளைப் பூர்த்தி செய்யப் பள்ளிக் குழுவிற்கு உதவும் ஒரு முக்கியமான கருவியாகும்.

அது பள்ளிக் குழுவிற்குப் பின்வருவனவற்றைச் செய்ய உதவுகிறது:

- ·உங்கள் குழந்தையை அறிந்து கொள்ளுதல்
- ·கற்றல் இலக்குகளை அமைத்தல்
- ·கற்றல் இலக்குகளை அடைவதற்கான உத்திகளை அடையாளம் காணுதல்
- ·இலக்குகளின் முன்னேற்றத்தைக் கண்காணித்தல்
- அனைத்து ஊழியர்களும் ஒரே அணுகுமுறையைப் பின்பற்றுகிறார்கள் என்பதை உறுதிப்படுத்துதல்

## ஒரு IEP எப்போது உருவாக்கப்படுகிறது?

- குறிப்பிட்ட மாணவர் 'விதிவிலக்கான மாணவர்' எனக் கூறும் அடையாளம் காணல், இட ஒதுக்கீட்டு மற்றும் மதிப்பாய்வுக் குழுவின் (IPRC) முடிவு எடுக்கப்பட்டு 30 நாட்களுக்குள்.
- சில வாரியங்கள் IPRC முடிவு இல்லாமல் IEP -ஐ உருவாக்கும்
- ஒவ்வொரு அறிக்கையிடல் காலத்திலும் IEP மதிப்பாய்வு செய்யப்பட வேண்டும்:
  - தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு ஆண்டுக்கு 3 முறை
  - இடைநிலை மாணவர்களுக்கு ஆண்டுக்கு 2 முறை

ஒவ்வொரு பள்ளி வாரியமும் வித்தியாசமானது! இணையதளத்தைப் பார்வையிடுங்கள், சிறப்புக் கல்வி வழிகாட்டியைப் படியுங்கள், மேலும் அறியப் பள்ளிக் குழுவுடன் பேசுங்கள். !!

IEP -களைப் பற்றி மேலும் அறிய QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது பார்வையிடவும்: https://bit.ly/School-Supports

## IEP -ஐ உருவாக்குவது யார்?

உங்கள் குழந்தையுடன் பணிபுரியும் பள்ளிக் குழு உறுப்பினர்களால் IEP உருவாக்கப்படுகிறது.

இதில் பின்வருவன அடங்கும்:

- ·ஆசிரியர்(கள்) அல்லது சிறப்புக் கல்வி வள ஆசிரியர் (SERT)
- பராமரிப்பாளர்கள் மற்றும்16 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய மாணவர்களிடமும் கலந்தாலோசித்து கருத்துக்கள் பெறப்படும்

## IEP -இல் என்ன உள்ளடக்கப்படும்?

ஒரு IEP உங்கள் குழந்தை பற்றிய தகவல்களையும், பள்ளியில் அவருக்கு ஆதரவளிக்கப் பள்ளிக்குழு பயன்படுத்தும் நுட்பங்கள்மற்றும் உத்திகளையும் உள்ளடக்கியிருக்கும்.

## நீங்கள் எப்படி தயாராகலாம்

உங்கள் பிள்ளையைப் பற்றி நன்கு அறிந்த ஒரு நபர் என்ற வகையில், உங்கள் மதிப்புமிக்க அறிவைப் பகிர்ந்துகொண்டு, பின்வரும் படிகளைப் பின்பற்றுவதன் மூலம் பள்ளிக் குழுவிற்கு நீங்கள் உதவலாம்:

- உங்கள் குழந்தையின் தகவல்களைச் சேகரித்து ஒழுங்கமைத்தல் (எடுத்துக்காட்டாக:, அறிக்கைகள், மதிப்பீடுகள், பரிந்துரைகள்)
- ஏதேனும் கேள்விகளைத் தயார் செய்தல்
- எந்த ஆதரவு உங்கள் குழந்தைக்கு உதவக்கூடும் என்பதைக் கவனத்தில் எடுத்தல்

AutismONTARIO